செ.வெ.எண்: 46 நாள்: 31.05.2019

**தூத்துக்குடி மாவட்டம் வல்லநாட்டில் சுதந்திர போராட்ட வீரர் வெள்ளையத்தேவன் அவர்களின் 249வது பிறந்தநாளையொட்டி மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் சுதந்திர போராட்ட வீரர் வெள்ளையத்தேவன் அவர்களின் மணிமண்டபத்தில் அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.**

---

தூத்துக்குடி மாவட்டம் வல்லநாட்டில் சுதந்திர போராட்ட வீரர் வெள்ளையத்தேவன் அவர்களின் 249வது பிறந்தநாள் விழா இன்று (31.05.2019) நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் கலந்துகொண்டு, சுதந்திர போராட்ட வீரர் வெள்ளையத்தேவன் அவர்களின் மணிமண்டபத்தில் அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சின்னப்பன், மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் மு.வீரப்பன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பின்னர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, நாட்டு விடுதலைக்காக போராடிய சுதந்திர போராட்ட தியாகிகளை கவுரவிக்கும் வகையில் மணிமண்டபங்கள், சிலைகள் கட்டப்பட்டு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் 65 மணிமண்டபங்கள், 4 நினைவு சின்னங்கள், 4 நினைவு தூண்கள் ஆகியவை கட்டப்பட்டு சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர போராட்ட தியாகிகள் அவர்களின் பிறந்தநாளினை அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்த தெரிவித்துள்ளார்கள்.

அதன்படி தூத்துக்குடி மாவட்டம் வல்லநாட்டில் வீரபாண்டிய கட்டப்பொம்மன் அவர்களின் படைத்தளபதியாக விளங்கிய சுதந்திர போராட்ட வீரர் வெள்ளையத்தேவன் அவர்களின் 249வது பிறந்தநாள் விழா அன்னாரது மணிமண்டபத்தில் இன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவில் அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் கயத்தாரில் சுதந்திர போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டப்பொம்மன் அவர்களுக்கு மணிமண்டபம், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் அவர்களுக்கு மணிமண்டபம், ஓட்டப்பிடாரத்தில் வ.உ.சி. அவர்களுக்கு மணிமண்டபம், எட்டயபுரத்தில் மகாகவி பாரதியார் அவர்களுக்கு இல்லம், சீறாப்புராணம் இயற்றிய அமுதகவி உமறுப்புலவர் அவர்களுக்கு மணிமண்டபம், சுதந்திர போராட்ட வீரர் அழகுமுத்துக்கோன் அவர்களுக்கு மணிமண்டபம் ஆகியோருக்கு மணிமண்டபங்கள் கட்டப்பட்டு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

விளாத்திகுளத்தில் இசை மாமேதை நல்லப்பசுவாமிகள் அவர்களுக்கு நினைவுத்தூண் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அதேபோல், சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டும் பணிகள் 70 சதவிதம் முடிவு பெற்றுள்ளது. இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள் இப்பணிகள் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. வல்லநாட்டு பகுதியில் உள்ள் சுதந்திர போராட்ட வீரர் வெள்ளையத்தேவன் அவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் பொதுமக்கள் சுதந்திர போராட்ட வீரர் வெள்ளையத்தேவன் அவர்களுக்கு முழு உருவ வெண்கல சிலை நிறுவ கோரிக்கை வைத்தார்கள். இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலனை செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

விழாவில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.வெ.சீனிவாசன், திருவைகுண்டம் வட்டாட்சியர் திரு.எஸ்.சந்திரன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.நி.சையத் முகம்மத், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கருங்குளம்) திரு.எஸ்.வெங்கடாசலம், திரு.இ.பாலசுப்பிரமணியன், முக்கிய பிரமுகர் திரு.செங்கண், கிராம நிர்வாக அலுவலர் திருமதி.எஸ்.ஆனந்தஜோதி, ஊராட்சி செயலர் திரு.டி.சங்கர் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.